Organ of the Indian Centre For Encouraging Excellence. 3E1 Court Chambers, New Marine Lines, Bombay 400 020

Vol. V No. 5

*Hon. Editor*: **N. H. Atthreya**

# Excellence

## "ACME"

"What does the acronym "ACME" stand for?"

This is a question we are often asked. The answer is it is not an acronym. ACME is **not** a contraction for a long name.

ACME is acme, height, zenith.

It is symbolic of the heights of excellence people are scaling in their chosen or chance area.


**Mahato mahiyan** is the Upanishadic saying. "Greater than the great.") As poet Shelly says, it is "higher still and higher".

The "ACME" Award also symbolises the thrust, the upward thrust, the onward thrust, the constant moving forward, the unceasing march in human excellence.

It also symbolises stamina, the energy that goes with the pursuit of excellence.

The sustained concern for others and the hardiness of spirit that calls for the demonstration thereof are symbolised by this ACME Award.

N. H. ATTHREYA



The ACME award

For EXCELLENCE

## ACME AWARD

## FUNCTIONS AT MADURAI

The nineth Excellence award function was held on 5th February 1976 at Madurai.

The receipient was Sri V. M. Sadasivan a hotelier of Madurai City.

Sri V. P. R. Gangaram Dorairaj, a leading businessman of the city who presided gave away "ACME" award to Sri V. M Sadasivan. Local citizens and elites of the city attended the function, held at T V S auditorium, Madurai.

∴ ∴ ∴

At a pleasant evening function held at Gujarat Samajam on 12th February 1976 at Madurai, "ACME" award was presented to Dr. K. M. Venkatachalam, Dental Surgeon of Madurai.

Sri Karumuthu T. Manickavasagam Chettiar, Chairman Sree Meenakshi Mills group gave away the award to Dr. K. M. Venkatachalam.

This function was largely attended.

***TEXT OF SPEECH***

***BY***

***SRI V. P. R. GANGARAM DORAIRAJ***

**மகளிர் பெருமக்களே, பேராசிரியர் ஆத்ரேயா அவர்களே, பெரியோர்களே,**

**என் வாழ்நாளில் இதுவரை எத்தனையோ கூட்டங்களில் கலந்துகொண்டிருக்கின்றேன்; எத்தனையோ கூட்டங்களில் பேசியும் இருக்கின்றேன். ஆனால், இன்று, இந்த இடத்தில் நின்று பேசுவது போன்ற இன்பத்தை நான் இதுவரை பெற்றதில்லை. உவகை உள்ளத்தில் ஓடுகின்றது.**

**என் இதயத்தில் என்னென்ன கனவுகளை ஏந்தியிருக்கின்றேனோ, அவற்றில் ஒன்று, இன்று நனவாகின்றது என்ற பெருமித உணர்வால் பெரு மகிழ்வு கொள்கின்றேன்.**

**இனி இன்றைய நிகழ்ச்சிக்கு வருகின்றேன்.**

1936 ஆம் ஆண்டு விடுதலைப் போர் நம் நாட்டில் வேகமாக நடந்து கொண்டிருந்த காலம். ஒரு நாள் — ஒரு வாலிபர் — பாலக்காட்டில் எப். ஏ. வகுப்பு வரை படித்து முடித்தார். பாலக்காடு வடக்கந்தறை என்ற சிற்றூரில் படித்து வளர்ந்தவர். வறுமையின் கோரப்பிடியால் சிக்குண்டு தவிக்கின்றார். பிழைக்க வழிதேடி ஓடோடி வருகின்றார் மதுரைக்கு. கோவலனும் கண்ணகியும் சோழ நாட்டிலிருந்து இங்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்தார்களே, அதுபோல.

சேர நாடு வடக்கந்தரையிலிருந்து மதுரைக்கு வந்த அந்த வாலிபர் தேரோடும் திருவீதி எங்கும் சுற்றுகின்றார். வேலை தேடி; கிடைக்கவில்லை. சோர்வுற்று நடைபாதை அருகே சிந்தை தளர்ந்து நிற்கின்றார். அருகில் இருவர் பேசும் குரல் கேட்கின்றது. உற்றுக் கேட்கின்றார். ஒருவர் கூறுகின்றார். "பக்கத்திலிருக்கும் உணவகத்தில் மாவு ஆட்டும் வேலை காலியாக இருக்கின்றது."

அதைக் கேட்டவுடன் ஓடோடுகின்றார் அவ்வாலிபர் அந்த உணவகத்திற்கு. மாவு ஆட்டும் பணியை மேற்கொள்கின்றார். "இராமா கபே"யில் இராமய்யர் உணவகத்தில் அவ்வாலிபர் மாவு ஆட்டும் வேலை செய்து வருகின்றார். மாவு ஆட்டும் வேலையிலிருந்து வளர்ந்து, வளம் பெற்ற வாழ்வு பெறுகின்றார் அவ்வாலிபர். அவ்வாலிபர் யார்? அவர்தான் நம் பாராட்டுக்குரிய திரு. வி. எம். சதாசிவம் அவர்கள்.

இராமய்யருடைய அன்புக்குரியவராக திரு. சதாசிவம் 1936 லிருந்து வளர்கின்றார். வடக்கு மாசி வீதியில் 1942ல் மார்டன் லாட்ஜ் என்ற உணவகத்தை அமைத்து, அதை நடத்தும் பொறுப்பை சதாசிவத்திடமும், அவர் நண்பர் காலஞ்சென்ற நாராயணசாமியிடமும் ஒப்புவிக்கின்றார். மக்கள் நல்லாதரவைப் பெறுகின்றது அவ்வுணவகம். சதாசிவத்தின் அன்புப் பணி மக்களைப் பிணைக்கின்றது. நான் பலதடவைகள் அந்தக் காலத்தில் அங்கு சென்றிருக்கிறேன். திரு. சதாசிவத்தின் முகமலர்ச்சியுடன் கூடிய பணி இன்னும் என் உள்ளத்தில் பசுமையாக இருக்கின்றது.

இராமய்யர் ஒரு வேதாந்தி. சேர்ந்திருக்கின்ற செல்வம் பேர்துமென்று கருதினர். "வைத்தான் வாய் சார்ந்த பெரும்பொருள் ஒன்றுண்ணுன் செத்தான் செயற்கிடைந்ததில்" என்று வள்ளுவர் காட்டிய கயவனைப் போன்றவரல்ல அவர். மார்ட்டின் லாட்ஜை அப்படியே சதாசிவம் நாராயணசாமியிடம் ஒப்படைத்துவிட்டு, பாலக்காடு சென்றுவிட்டார்.

மார்டன் லாட்ஜை இவர்கள் இருவரும் திறமையுடன் நடத்தி வந்தனர். அந்த இடத்தைக் காலி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பிறகு "மார்டன் ரெஸ்டாரண்ட்" என்ற பெயருடன் திண்டுக்கல் சாலையில் உணவகம் தொடங்கினர். அது நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தது. நாராயணசாமி திடீரெனக் காலமாகி விடவே, முழுப் பொறுப்பையும் சதாசிவமே ஏற்றுச் செவ்வனே நடத்தி வந்தார்.

நகரத்தில் சிறப்பு விருந்து எங்கு நடந்தாலும், சதாசிவத்தின் முத்திரை ஆங்கே இருக்கும். சிற்றுண்டி விருந்து, மதிய - இரவு - உண்டி அனைத்தும் சதாசிவம் மேற்பார்வையில் மக்கள் மனநிறைவு பெறும் வண்ணம் நடந்து வந்தது.

சதாசிவம் இன்றி மதுரையில் விருந்து இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. 1959-ல் ரோட்டரி மாநாடு மதுரையில் டி வி எஸ் அதிபர் திரு. டி. எஸ். ராஜம் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. உணவு விநியோகம் முழுவதும் சதாசிவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மிகச் சிறப்பாக உணவு அமைந்திருப்பதை அனைவரும் பாராட்டிப் புகழ்ந்தனர்.

1961ல் அனைத்திந்திய காங்கிரஸ் மாநாடு நடந்தபொழுது, ஜவஹர்லால் நேருவுக்கு 2000 பேர்களடங்கிய சிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டது. சதாசிவம் மேற்பார்வையில் அவ்விருந்து வெற்றிகரமாக நிறைவுற்றது. எவ்வளவு விறுவிறுப்பாக அவர் அவ்வமயம் பணியாற்றினர் என்பது இன்னும் என் மனத்திரையில் நிழலாடிக் கொண்டேயிருக்கின்றது.

மதுரைக் கல்லூரியின் Rector நாளில் ஆண்டுதோறும் விருந்தளிக்கும் பணியை சதாசிவம் மேற்கொண்டிருந்தார்.

அரிமாச் சங்கம், ஜேசிச் சங்கம், ரோட்டரிச் சங்கம் மாநாடுகள் அனைத்திலும் சதாசிவத்தின் பணி தவறுமல் இருக்கும். டி.வி எஸ். தொழிலாளர் சங்க ஆண்டு விழாவின் போது ஒவ்வொரு ஆண்டும் 5000 பேர்களுக்கு விருந்தளிக்கும் பணியை சதாசிவம் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

மதுரை இராமனுதபுரம் வர்த்தக சங்கத்தின் விருந்துகள் அனைத்தும் சதாசிவத்தின் பொறுப்பில் தான் இதுவரை நடந்தேறிக் கொண்டு வருகின்றன.

சத்குரு சங்கீத சமாஜத்தின் இசைக் கச்சேரிகள் நடக்கும் பொழுது சிற்றுண்டி அளிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

அவரவர் மனப்பான்மையை அறிந்து. முகமலர்ச்சியோடு விருந்தளிப்பவர் சதாசிவம்.

சிருங்கேரி சங்கராச்சாரியார் சுவாமிகள் சதாசிவத்தைப் போற்றிக் கூறுகையில் "**சதாசிவம் மதுரையின் காமதேனு**" என்று வர்ணித்துள்ளதே சதாசிவத்தின் திறமைக்கு ஒரு பெரும் நற்சான்று. நோபல் பரிசு பெற்ற சர். சி. வி. இராமன் இவர் பணியைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். சர். இராதாகிருஷ்ணன், பாரத ரத்ன காமராஜ், பாரத ரத்ன லால்பகதூர் சாஸ்திரி, ஆளுநர் மேதி, மனிதருள் மாணிக்கம் ஜவஹர்லால் நேரு ஆகியவர்களின் பாராட்டைப் பெற்றவர் திரு. சதாசிவம். 1943ல் சதாசிவம், பார்வதி அம்மையாரின் திருக்கரம் பற்றி, திருமணம் செய்துகொண்டார். "பானை பிடித்தவள் பாக்கியசாலி" என்ற பழமொழிக் கேற்ப, திருமணம் செய்த நாள் முதல் சதாசிவம் வாழ்வில் வளம் காணப்பட்டது.

"பணிவுடையன் இன்சொல் ஆவது ஒதுவற்கணி" என்ற வள்ளுவர் வாய்மொழிக் கேற்ப, பணிவு, இன்சொல் இவ்விரண்டும் அணியாகக் கொண்டவர் திரு. சதாசிவம்.

"கூறுமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறுநீர் வையக்கு அணி"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க குறிப்பறிந்து, பணி செய்து வருபவர் சதாசிவம். அகமும், முகமும் மலர அவர் உபசரிக்கும் முறையே தனிச் சிறப்பு மிக்கதாகும்.

1972ம் வருடம் நவம்பர் மாதம் 28ம் தேதி அவருக்கு மணி விழாக் கொண்டாடப்பட்டது. அப்பொழுது அவர் ஊழியர்கள் "எங்கும் சதாசிவம்; எங்கும் சதாசிவம்; எங்கள் சதாசிவம்; போற்றி" என்று புகழ் பாடியது எத்துணைப் பொருத்தம் ?

இத்தகைய தனிச்சிறப்பு நலன் உடையப் பெருந்தகை திரு. சதாசிவத்திற்கு தனித்திறமையை ஊக்குவிக்கும் ஒப்பற்ற இந்திய நிறுவனம் அளிக்கும் "அக்மி" விருதைத் தருவதிலே பெருமிதம் கொள்கின்றேன்.

## தலைவர் பின்னுரை.

"அக்மி" விருது குறித்து பேராசிரியர் ஆத்ரேயாவுடன் சில நாட்களுக்கு முன் பேசிக்கொண்டிருந்தேன். அவர் பேச்சு என் சிந்தையைக் கவர்ந்தது. ஒரு மாபெரும் மேதையுடன் பேசிக்கொண்டிருக்கின்றேன் என்ற பெருமித உணர்ச்சி என் உள்ளத்தே எழுந்து கொண்டேயிருந்தது. தனிச் சிறப்பை, தனித்திறமையை எங்கு எவரிடத்திலும் கண்டலும், நாம் பாராட்ட வேண்டும்.

திறமை மிக்கவர்களைப் பாராட்டா விட்டால், திறமையை வளர்க்க முடியாது. பாட்டுக்கொரு புலவர் பாரதியார் அன்று கூறினர். "எதனை விரும்புகிரேமோ அது தோன்றுகிறது; எதை ஆதரிக்கிரேமோ அது வளர்ச்சி பெறுகிறது; பேணுத பண்டம் அழிந்து போகும். பழக்கத்தில் இல்லாத திறமை இழந்து விடப்படும். அறிவுடையோரையும், லோகோபகாரியையும், வீரரையும் கொண்டாட தேசத்தில் அறிவும், லோகோபகாரமும், வீரமும் மங்கிப் போகும்" என்று.

திறமையை வளர்க்கத் திறமை பெற்றேர்களைப் பாராட்டுவதே நல்வழியாகும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்;
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையால்"

என்பது வள்ளுவர் வாக்கு. பிறப்பு அனைவருக்கும் ஒன்றே; ஆனல் தனிச் சிறப்பு அவரவர் முயற்சியால் தான் வந்தமைகின்றது. மன்னர்கள் பலருண்டு; அவர்களில் சிலர்தான் தனித் திறமை மிக்கவர்கள்; மனிதர்கள் பலருண்டு-தனித் திறமை மிக்கவர் சிலர்தான். எந்தத் துறையானுலும் அந்தத் துறையில் தனித்திறமை பெற்றவர்கள் இருக்கக்கூடும். குப்பை கூட்டும் குப்பன் தனித் திறமையுடன் இருக்கக்கூடும்; காரோட்டிக் கந்தனும் அவ்வாறே திகழக் கூடும். எந்தத் துறையானுலும் ஆங்கே தனித்திறமை பெற்றவர்களைப் பாராட்டிப் போற்றினல், நாடு நலம் பெறும்.

மக்கள் திறமையை வைத்துத் தான், நாடு பீடு பெறுகின்றது. "எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை நீ வாழி நிலனே" என்று கூறுகின்ருர் சொல்லின் செல்வி ஔவையார். நல்லவர்கள்; திறமை மிக்கவர்கள் பெருக பேராசிரியர் ஆத்ரேயா காண்பிக்கும் வழியே சிறந்த வழியாகும்.

தனித் திறமை பெற்றவர்களை நாடு அறியுமாறு செய்யவேண்டியதும் அவசியமாகும். மாணிக்கம் தனிச் சிறப்புடையதுதான். அது குப்பையோடு கிடந்தால் கவனிப்பாரற்றுப் போய்விடும். தனித் திறமையுடையோர் சிறப்பை மக்கள் போற்றிக் கொண்டிருந்தால் ஏனையோரும் திறமையை வெளிக்கொணர, வளமுடன் வளர்க்க பெருவிருப்பம் கொள்வார்கள்.

குடத்திற்குள் இருக்கும் சுடர் ஒளி வெளியில் அனைவருக்கும் தெரியுமாறு செய்தால்தான் சுற்றியுள்ள இருள் அகலும், இதரர் கண்களுக்கும் வனப்புமிகு தோற்றமளிக்க இயலும்.

தனித் திறமை பெற்றவர்களை நாடும் மக்களும் அறியச் செய்ய ஒரு நிறுவனம் இருப்பது நல்லது என்று நான் நெடுங் காலம் நினைத்தது உண்டு.

பேராசிரியர் திரு. ஆத்ரேயா அவர்கள் சிந்தனைப் பொய்கையில் முகிழ்த் தெழுந்த வண்ண மலர்தான் 'தனிச் சிறப்பை ஊக்குவிக்கும் இந்திய நிறுவனம்' (**Indian Centre for Encouraging Excellence**).

இந்த எழில் நிறுவனத்தின் செயல் திட்டங்களை அறிந்து சிந்தை மகிழ்ந்தேன். நாட்டு நலனை நன்கு வளர உறுதுணை புரியும் இந்நிறுவனம் என்ற நம்பிக்கை என் இதயத்தில்-ஆழ மாகப் பதிந்தது.

தனித்திறமையுடையோர் எட்டுப் பெருந்தகைகளை இதுவரை இந் நிறுவனம் பாராட்டி, 'ACME' விருது அளித்து மகிழ்ந்துள்ளது. பைந்தமிழ் வளர்த்த செந்தமிழ் நாட்டில் முதன் முறையாக 'ACME' விருது அளிக்க முன் வந்துள்ளது. நம் மதிப்புக்குரிய திரு சதாசிவம் அவர்கட்கு. இந்நிறுவனம் இணையற்று வளர வளர, திறமையுடையோர் எண்ணிக்கையும் வளர்ந்து கொண்டே வரும். நாடு பீடு பெறும்.

தனித் திறமையுடையோர்களைப் பாராட்டி வரும் தனிச் சிறப்புடைய இந்நிறுவனம் சீரோடு, சிறப்போடு வளரட்டும் — வாழட்டும்.

# Text of Citation of the Excellence Award Presented to

## Sri V. M. Sadasivan

Madurai

### உழைப்பால் உயர்ந்த உத்தமா !

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தும், கல்லூரிப் படிப்பு படித்திருந்தும், 'யாதும் அவன் தொழிலே' என்ற பெரும் நோக்குடன் ஒரு உணவு விடுதியில் சாதாரண ஊழியனுகச் சேர்ந்து பணியாலும் பண்பாலும் படிப்படியாக முன்னேறி, இன்று ஹோட்டல் துறையில் "ஐயருக்கு நிகர் ஐயரே" என்று பலரும் ஒருமுகமாகப் பாராட்டும் வண்ணம் தாங்கள் திகழ்வதைக் கண்டு நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

### அமுதூட்டும் கலியுக நளனே !

எல்லோரையும் திருப்தி செய்ய முடியாத கலை ஒன்று உண்டென்றால் அது சிற்றுண்டிக் கலைதான். ஆனால், தங்களுடைய கைவண்ணமும், தரமான பொருளும், தங்கமான மனமும், மற்ற சக ஊழியர்களையும் தங்களைப்போல் பாவித்து அவர்களை நடத்துகின்ற காரணத்தாலன்றோ எத்தனை ஆயிரம் பேர் உணவு சாப்பிட்டாலும், இம்மிகூட உணவின் நேர்த்தியிலும், சுவையிலும் குன்றாது நன்றாக அமைந்துள்ளது என்று பாராட்டிச் செல்கின்றனர்.

### மதுரையின் காமதேனுவே !

"உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பது பழமொழி! இப்பொன்மொழிக்கிணங்க ஏழை எளியவர்களுக்கெல்லாம் அவர்கள் அகமும் முகமும் மலர உணவு படைத்ததால் அன்றோ ஸ்ரீ ஜகத்குரு சிருங்கேரி சங்கராச்சார்ய சுவாமிகள் தங்களுடைய அடக்கத்தையும், முகத்தில் எப்போதும் ஒளிவிடும் புன்சிரிப்பையும் பார்த்து "மதுரையின் காமதேனு" என்று அழைத்திட்டார்கள். இது தாங்கள் செய்திட்ட புண்ணியம் என்று சொல்லவும் வேண்டுமோ!

### செஞ்சோறு படைக்கும் செயல்வீர !

அறுசுவை உண்டியாகட்டும், அதனை நேரிடையாகப் படைக்கின்ற முறையாகட்டும், ஒரு காரியத்தை எடுத்துக்கொண்டால் அதில் நஷ்டம் வந்தாலும் இறுதிவரை சக ஊழியர்களோடு இருந்து நிர்வாகத்தினை திறம்பட நடத்துவதையே தங்கள் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இன்று இந்தத் துறையில் தமிழகத்தில் தனக்கென்று தனிப்பெயரை நிலைநாட்டியிருப்பதல்லாமல் தங்களுக்கு இந்தத் துறையில் அன்பும் ஆதரவும் அளித்த திருவாளர்கள் ராமையர். நாராயணசாமி ஐயரையும் செய்நன்றி மறவாமல் விசுவாசத்தோடு எப்போதும் நினைத்து, நல்ல பணிகளை நாளும் செய்துவருகிறீர்கள்.

### மீனாட்சியின் அருள் பெற்றவரே !

ஆரம்ப சூரத்தனம் என்பார்கள். அப்படியில்லாமல் இருபது வருஷமாக நாளுக்கு நாள் 'மேல்' என்று சொல்லும்படியாக, எவ்வளவோ இடையூறுகள் இருந்தும் கூட, இத்தொழிலை இவ்வளவு திறனுக, உண்பவர் யாவரும் நெஞ்சம் இனிக்கும் விதமாக எப்படி நடத்துகிறீர்கள் என்று பலரும் வியக்கிறார்கள். நாங்களும் வியக்கிறோம். யோசிக்கும் வேளையில், அன்னையின் அருளும் தங்கள் ஆக்கமும் சேர்ந்ததால்தான் இவ்விதம் நிகழும் என்று தோன்றுகிறது.

### இனிது வாழி !

முத்தமிழ் முக்காலும் வளருகின்ற
மூக்கூடல் மதுரை தன்னில்
தித்திக்க அமுதினைப் படைத்திட்டு
உழைப்பாலே உயர்ந்திட்ட
வித்தக நல்லோய்; சதாசிவனே !
வெற்றி மிகவும் பெற்றிட்டு
இத்தரணி மீதினிலே மீனாட்சி
இன்னருளால், இனிது வாழி !

நா. ஹ ஆத்ரேயா
Hon. Director

## SPEECH OF ACCEPTANCE BY SRI V. M. SADASIVAN

விழாத் தலைவர் அவர்களே!
திரு ஆத்ரேயா அவர்களே!
பெரியோர்களே!
தாய்மார்களே!
மற்றும் இங்கு குழுமியுள்ள
நண்பர்களே!'

உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது பணியைப்பற்றி பாராட்டிப் பேசி, ஒப்பற்ற பரிசு தந்தமைக்கு என் நன்றியை எவ்வாறு கூறுவது என்று தெரியவில்லை மகிழ்ச்சியடைகிறேன். பொது வாழ்வில், தன் கையே தனக்கு உதவி என்ற பழமொழிக்கேற்ப தனிமனிதன் சாதாரண மனிதன் தன் சொந்த முயற்சியால் நேர்மையுடன் வாழ்வில் முன்னேறுபவர்களுக்கு மேலும் ஊக்கமளித்து உற்சாகப்படுத்தி வருகின்ற இந்திய திறமை ஊக்குவிப்புக் கேந்திரத்திற்கும், அந்த கேந்திரத்தில் முக்கியப் பொறுப்பேற்று பல அலுவல்களுக்கிடையே திறம்பட நடத்தி வருகின்ற திரு. ஆத்ரேயா அவர்களுக்கும், அவரது நண்பர்களுக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

ஆத்மார்த்தமாக நான் ஏதோ என் பணியினை திருப்திகரமான முறையில் செய்து வர இன்னும் முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். ஆனால் என்னுடைய எண்ணங்களை ஏதாவது செயலில் வடித்து எப்பொழுதும் ஓரே சீராக இருக்க வேண்டும் என்ற ஒரே ஆசைதான், உண்டு.

என் பணி இன்னும் சிறக்க வேண்டும் என்பதற்காக இப்பரிசை ஊக்குவித்தமைக்கு மிக்க நன்றி.

என்னைப்பற்றி நண்பர் திரு. வி.பி.ஆர். கங்காராம் துரைராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள் அவருக்கு என் நன்றியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்,

திரு. ஆத்ரேயா அவர்கள் செய்து வருகின்ற இந்த சீரிய பணிக்கும் நிர்வாகத் திறமைக்கும், சீரிய பணியாற்றுகின்ற அவருக்கும் இதுபோன்று இன்னும் உயர்ந்த பரிசினை அவரும் பெற வேண்டும் என்று எனது இருதயப் பூர்வமாக நினைக்கின்றேன்.

நான் பணி செய்யும் துறையில் பலர் இருக்கிறார்கள். பலரும் திறமையாக தங்கள் தொழிலைச் செய்கிறார்கள். நான் ஒன்றும் புதிதாகச் செய்ததாக எனக்குத் தோன்றவில்லை ஆனல் ஒன்று சொல்லமுடியும், என் குறிக்கோள் தங்கள் திருப்தி. தங்களுக்கு திருப்தி கிடைக்கப்படாவிட்டால் எனக்கு எவ்வளவு பணம் கிடைத்தாலும் சந்தோஷப்படமாட்டேன் அதே சமயம் எனக்கு கொஞ்சம் நஷ்டமானாலும், தங்களுக்கு திருப்தி ஏற்பட்டு விட்டால் மிகவும் சந்தோஷப்படுவேன். அதனால்தான் என்னிடம் பேரம் பேசும் சுபாவமோ, பழக்கமோ இல்லை.

என்னை மனிதன் என்ற முறையில் தான் கௌரவிக்கிறீர்கள். பணமுள்ளவன் என்ற முறையில்லை. பணம் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. பணமே குறி என்றால் பத்தும் பறந்து போவதைப் பார்த்திருக்கிறேன்; பார்க்கிறேன். இதனால்தான் பணம் சம்பாதிப்பதில் நான் யாருடனும் போட்டி போடுவதில்லை. லாபமே இல்லாமல் தொழிலை செய்தால் கடையை மூட வேண்டிவரும் அதே சமயம் லாபமே முக்கியம் என்று தொழிலைச் செய்தால் கண்ணியம் மூட நேரும். இந்த நிலைகள் எல்லாம் எனக்கு இப்பொழுது தோன்றுகிறது என்னைப் பொறுத்த வரையில் எது சரி என்று படுகிறதோ அதைச் செய்கிறேன். ஏதோ அபூர்வமாக ஒவ்வொன்றும் செய்கிறேன் என்று சொல்ல மாட்டேன்.

என்னைப் பாராட்டிக் கௌரவித்த தலைவர் அவர்களுக்கும், திரு. ஆத்ரேயா அவர்களுக்கும், மற்றும் இங்கு வருகை தந்து என்னைச் சிறப்பித்த நண்பர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், தாய்மார்களுக்கும், மற்றும் அனைவருக்கும் எனது தாழ்ந்த வணக்கத்தையும், நன்றியையும் கூறிக்கொள்கிறேன்.

வணக்கம்

**SPEECH BY**

**MR. KARUMUTHU MANICKAVASAGAM CHETTIAR**

*President of the Function*

I am extremely grateful to the Indian Centre for Encouraging Excellence and its Hon. Director for the great honour done to me in inviting me to preside over today's function and present the excellence Award to Dr. K. M. Venkatachalam. This Prestigious award, which this leading Dental Surgeon of Madurai richly deserves, is conferred upon him in recognition of the dedicated service, he has been rendering for decades with tireless zeal and sustained enthusiasm.

The Indian Centre for Encouraging Excellence is a non-profit organisation and it is a unique gathering of like-minded people, whose endeavour is to aim at excellence in whatever venture they may embark upon. These votaries of perfection are rendering a great service to the society by honouring people, who have distinguished themselves in their respective walks of life. This is a highly commendable move because it brings to light the greatness of those who are worthy of emulation and thus encourages the practice of this virtue, the pursuit of this ideal. This Centre is not an organisation in the ordinary sense of the term, has no rules and regulations and no membership. It is a group of people feeling the same way about excellence and pledged to spread this urge and identify it wherever present.

Longfellow in his poem 'Excelsior' describes an adventurous youth going up the dangerous Alpine slopes bearing a banner with the device 'Excelsior' which means 'Higher'. The mountaineer wants to distinguish himself by seeking the thrill of adventure and going higher-literally. This commendable motto can very well be adopted by us in our own avocations, in our daily life. We should strive to distinguish ourselves by seeking, not material gain, but inward satisfaction that comes of a sense of fulfilment. We shall then be on a higher place than others metaphorically.

Excellence is not an impractical ideal. It is attainable in all spheres. It is not confined to the 'intellectual field alone'. Its value lies in the immense benefit it confers on the public in general. Anything done for public good beyond the sphere of one's duty in a spirit of selflessness is a mark of 'Excellence' and must be, accordingly, recognised and encouraged. It is not a 'national' or 'group' virtue but is extremely 'individual' in nature.

For anyone to excel in his chosen field, he must, as a prerequisite, have an aptitude for the field, of his

choice. He must be willing to apply himself to his task with a sense of dedication and a spirit or sacrifice. He must have an inner urge 'to leave footprints in the sands of time' and lead such a life that he will be remembered by many and for long. Such 'a gem of purest ray serene' should not be allowed to languish 'in the desert air' of comparative but his greatness must be identified and duly honoured. This is especially important because such persons aim at excellence more for self-satisfaction than for wishing popular acclaim. By honouring such persons, we glorify excellence.

How does such excellence express itself? In what does it mainfest itself? The answer is, as I mentioned earlier, 'in selfless service'. In the Western Countries, where people are prosperous, they seek to excel by practising philanthropy. In countries like ours, people imbued with the spirit of service must make their mark in some other way i. e. in excelling others in their field of activity.

We have met here today to present the "award for Excellence" to our distinguished doctor citizen Dr. K. M. Venkatachalam. He is a well-known dental surgeon in this city and for several decades he has served the society as a selfless medical practitioner with a humanitarian outlook. He has earned the appreciation, the affection of all sections of society by his simplicity, love and care for those afflicted with ailments.

Sometimes non-recognition of talent and selfless service often causes frustration and leads to loss of interest even among men dedicated to the service of mankind. But there are a few who continue to serve society without caring for profit and recognition. Dr. Venkatachalam is one such rare person. He has been doing his work without any thought of personal glory or recognition and has always placed service before everything else. He has thus endeared himself to the entire populace in this great city.

I am happy to note that this centre has rightly spotted out this silent and unassuming doctor-philanthrophist and has selected him for this public recognition by proposing to present the award to the Doctor who has shown himself by his life and habits to be extremely deserving of it. The award is given to him for his "excellence" in his calling and in his daily life and also for its impact on others who have known him. I feel very much honoured by being asked to participate in this function and present the award to this distinguished son of India. I request him in all humility to accept it as a token of our recognition of his merit. I wish him greater honours and a long life of service to humanity.

---

Only He Deserves Power
Who Every Day
Justifies It

— **Dag Hammarskjocld**

◈ ◈ ◈

Enthusiasm is Like
Having Two Right Hands

— **Elbert Hubbard**

◈ ◈ ◈

A Man Who Would Move the World
Must First Move Himself

— **Socrates**

◈ ◈ ◈

We May Not Change Events But We Can
Change Our Approach to Events

— **Sarvapalli Radhakrishnan**

◈ ◈ ◈

No One Can Make You Feel Inferior
Without Your Consent

— **Eleanor Roosevelt**

◈ ◈ ◈

Ninety Per Cent of The Friction
In the World is Caused by the Tone of Voice

— **Arnold Bennett**

Text of Citation of the
Excellence Award Presented to

**Dr. K. M. Venkatachalam**

Today, the educated, the technically equipped, the economically advantaged are at crucial crossroads. The environmental pressures are all pushing them in the direction of impersonality, self-centredness and aggrandizement. To resist this trend and to reconcile the immediate with the ultimate is the need of the hour. You stand as a beaconlight at this hour.

In honouring you today, we are paying a tribute to a vision of excellence which clearly inspired you in your work.

For the past three decades or more, whatever you did-whether you taught Hindi or volleyball or whether you practised dental surgery-you gave of yourself, the best of you, the more and more of you. Not because any external agency required that of you but because of an inner compulsion, a compulsive concern for others.

Consistently, and for over twenty years, you have demonstrated concern for those who sought your professional help. They are to you men, women, in pain, and in need of relief-relief as much from the hands of medical care as from the bedside manners of a warm human being. You realised it and you gave it in full measure. Your firm gentleness, your persistent smile do as much for your patients as your professional skill.

You gave all that to everyone that stepped into your clinic-the rich and the poor, the young and the old, the able and the disabled. In the eyes of God, man is the same. In the eyes of a doctor the same is possible, you have been proving in your own way.

Once you were established, you could have chosen the easy way. You could have gone in for select clientele and hiked fee. You did NOT. You said to yourself that fees are an unavoidable and secondary part of service. Reducing, if not alleviating human pain, is the primary part. This is why you can keep taking time off to organise free dental camps for the disadvantaged.

To do all that you do and the way you do it day after day, week after week, year after year, it calls for energy of a high order-both psychic energy and physical energy. You seem to have made conscious provision for it through your active interest in sports and social service which once again comes down to concern for others in a larger sphere.

On behalf of the Indian Centre for Encouraging Excellence and on behalf of the many that have benefitted by your many-sided service, I pray and wish you many more years of fruitful work. Please accept this Award for Excellence as a token of our respect, admiration and affection.

N. H. ATTHREYA
Hon. Director

## SPEECH OF ACCEPTANCE BY DR. K. M. VENKATACHALAM

Ladies and Gentlemen,

All of you have assembled here to honour me, when the Indian Centre for Encouraging Excellence is giving me the Award. It is evident that you have so much affection for me and respect for the cause that the Indian Centre for Encouraging Excellence has taken up.

During the month of December, 1975, Professor Atthreya fixed up an appointment with me and arrived punctually at my house with the usual smile. I took him inside the house. During the course of the conversation, he started telling us about the origin of the Indian Centre for Encouraging Excellence, its motto and at last mentioned that the Indian Centre for Encouraging Excellence would like to invite me to accept its ACME Award. I accepted it on the ground that **"ANY ONE WHO MAKES AN HONEST EFFORT TO ATTAIN PERFECTION IN HIS FIELD OF PROFESSION"** comes under the category of Excellence. Only this makes me eligible to receive the Award. There are very many worthier persons in Madurai, pursuing Excellence in their fields of work; and it is my good fortune that Professor Atthreya knows more about me and had opportunities to study and observe me. With the degree of knowledge that I possess, I render professional work to my capacity and while doing so, I have a nature to respect all the people, irrespective of their status, occupation and position. By nature I am soft and I must have inherited the same through my revered parents. Added to that, my association with good people has guided and conditioned me to maintain my soft nature. Here is this assembly today, there are many who have excelled in their spheres of activities and have made deep impressions in our minds to follow their footsteps. My personal and frequent association with the sports activities, Hindi Movement, present profession have made me win the goodwill of the public.

The Indian Centre for Encouraging Excellence says: **"WE ARE NOT EMPHASISING WHAT A PERSON DOES; WE ARE EMPHASISING HOW A PERSON DISCHARGES HIS DUTIES"**

**"EVEN LITTLE ACTS OF EXCELLENCE WARRANT AN ACT OF ENCOURAGEMENT"**

These sayings of the Centre made me bold to accept this Award. This will act as a tonic to a person like me who has worked in the present profession for nearly 30 years and more.

Sports field gave me stamina to stand the strain of my professional work. My association with the Presidents and Executive Members of various organisations pinned me to behave good.

Of course, during my felicitation, only the good of the person is talked of and that too a little more than what he actually deserves, just because of their personal liking for the person and all of you have showered your kindness upon me.

**Why am I doing the way I am doing?** This is a question I have been often asked to attempt.

The answer is simple. God has given me tenderness and kindness to be lavishly spent on people I came across. I believe that **no person** who steps into my clinic should return unhappy because of my carelessness. So I am all attention.

The 5% additional care I bring on the doctor-patient relationship makes every visitor my well wisher.

I forego a little personal convenience but I believe it is worth it.

I also believe in Rajaji's saying, namely, **"It is the privilege of the favoured classes to render voluntary help to less fortunate brethren"** What I do perhaps looks simple to me now because I have formed it as a habit.

On this happy occassion, I will be failing in my duty if I do not make mention of Indian Dental Association and its Madurai District Branch. As the Secretary of this Branch for nearly ten years, I had very many opportunities to come in contact with eminent personalities and Service Clubs like Rotary, Lions Club, All-India women's Conference (Recreation Club) who gave our Branch chances to run Free Dental Check-up and Free Dental Relief Camps at various centres in the three Districts of Madurai, Ramnad and Tirunelveli. The willing and sincere cooperation of my professional colleagues, the same type of zeal and love to render service to the poorer society and their co-operation during the occasions is unforgettable and applaudable. I would like to express my heartfelt thanks to one and all my professional colleagues. This honour, I consider, is not solely for myself, but to the entire Dental profession.

Once again, let me express my sincere thanks to the Indian Centre for Encouraging Excellence, its Hon. Director Professor N. H. Atthreya and today's President Sri Manickavasagam Chettiar and all of you Ladies and gentlemen for the honour extended to me.

Excellence is a Journey
Not a Destination

Nothing But the best
From Me
And For me

Trifles Make Perfection
And Perfection is No Trifle

— **Michel Angelo**

⟡ ⟡ ⟡

Don't Complain About the Darkness
Light a Candle

It is a Funny Thing About Life
If you Refuse To Accept Anything
Except the Best
You Very Often Get It

— **Somerset Maugham**

⟡ ⟡ ⟡

Do a Little More Each Day
Than You Think You Possibly Can

— **Lowell Thomas**

⟡ ⟡ ⟡

Doing the Best We Can
And Then Some

The Whole Fun of Living
Is Trying To Make Something Better

— **Charles Kettering**

⟡ ⟡ ⟡

Mistakes will Happen
*But Must You Give Them*
*So Much Help?*

Nothing Will Ever Be Attempted
If All Possible Objections
Must First Be Overcome

— **Samuel Johnson**

## About the receipients ... ... ...

### Sri V. M. SADASIVAN

Born in the year 1912 on the first day of December, Sri V. M. Sadasivan hails from a noble family from the village of Vadagantharai in Palghat (Kerala). After his collegiate education he came to the city of Madurai where he took up a humble career in a hotel in the year 1932. Within a span of ten years, his stewardship in the hotel won laurels for him and he rose up to a position of Manager. During 1942 - 1952 he was entrusted with ownership responsibilities. He is now acclaimed as the best hotelier.

Sri Sadasivan and his well renowned Modern Restaurant accomplish public acceptance for the unique, unsurpassed professional skill and quality oriented service. Sri Sadasivan has a happy family. He has two sons and two daughters.

### Dr. K. M. VENKATACHALAM

Dr. K. M. Venkatachalam was born on 7th July 1915. He had his education in Madurai. Before choosing up a career for him he took active participation in Mahatma Gandhiji's National movement. He desired to dedicate to public service by enrolling himself as Hindi pracharak. He was an active worker in the Dakshina Bharatha Hindi Prachara Sabha. Although he became a Hindi Pandit, in course of time he shaped himself as a Dental Surgeon by qualifying himself thereto. Dr. K. M. Venkatachalam started his practice as a dental surgeon in Madurai in the year 1946 He was very soon recognised by the people of Madurai, both in the professional sphere as well as social spheres. Dr. Venkatachalam represents many public bodies and is very actively engrossed in his profession as well as social service. Happly married, Dr. K. M. Venkatachalam has three sons and two daughters.

---


## ACKNOWLEDGEMENT

We wish to express our gratitude to T V S Management and their officers' for their active participation in successfully conducting the two "ACME" award functions sponsored by us at Madurai.

We also thank all other friends who have given us their invaluable assistance in organising these functions.

# Aims and Objects of the Centre

1. To stimulate amongst all sections of the public thought and effort for the promotion and development of the excellence movement in the country.
2. To establish a network of contacts both at home and abroad to strengthen this movement.
3. To publish a journal that would serve as an organ of the Centre, communicate its ideas and ideals and keep the public informed of the achievements. possibilities and trends in this direction.
4. To bring out original writings, reprints, translations of relevant publications in India and elsewhere that would help raise standards of achievement in different walks of life.
5. To compile and maintain lists of individuals and institutions that have consistently maintained high standards and to extend such support as is possible.
6. To establish and maintain a library of visual aids, books, periodicals and papers on this subject for the benefit of the members.
7. To set up institutions like schools, colleges, studios, galleries, libraries etc for training in excellence as a concept and activity.
8. To institute and establish fellowships, scholarships, grants, awards and prizes to encourage the excellence movement in all its facets.
9. To set up a laboratory which will objectively and systematically examine the products and services given to the public and loan them-excellence seals for specific periods.
10. To found, establish, create and maintain endowments and/or grants for the purposes aforesaid.
11. To undertake all such activities as may promote the excellence movement in the country.

Two of the continuing activities are (a) the publication of this bi-monthly **Excellence** and (b) the felicitation of men and women who pursue excellence in any area. To encourage the excellence movement, **you can** (a) subscribe to or gift this journal—it costs Rs. 10 per year; (b) bring to our attention any that you know of in any part of India who can be extended an Excellence Award; (c) make possible one more award by donating Rs. 500.

**EXCEL INDUSTRIES LTD. (PUBLIC RELATIONS DEPT.)**
**HAVE THOUGHT IT FIT TO ADOPT THIS JOURNAL**
**AS PART OF THEIR PUBLIC SERVICE**

Edited, published and printed by N. H. Atthreya on behalf of the Indian Centre for Encouraging Excellence, III Floor, Court Chambers, 35, New Marine Lines, Bombay-400 020 and printed at Prints, Madurai-625 001.